**கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம் - 2021**

---

கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான மேலதிக நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2020 யூலை 23 ஆம் திகதிய 6727 எல்கே மற்றும் 6728 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 5.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. தொற்றுநோய்களின் போது காத்திருப்புப் பட்டியலில் விண்ணப்பதாரர்களைச் சேர்ப்பதன் மூலமும், தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொற்றுநோய்களின் போது அதிகரித்த தொகையை வழங்குவதன் மூலமும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு தற்போதுள்ள காசு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் காசுப் பரிமாற்றங்களை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,248.45 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 87.24 மில்லியனானதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நாடு முழுவதும் முடக்கம் மற்றும் ஊரடங்கு உத்தரவு காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 10,000 மதிப்புள்ள அத்தியாவசிய நல்ல பொதிகளை வழங்குவதற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் (ஐடீஏ) அரசாங்கம் கடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது. இதன்படி, மேற்படி கொடுப்பனவுகளுக்காக ஐடிஏ ரூபா 9,887 மில்லியனை வழங்கியிருந்த நிலையில், அரசாங்கம் ரூபா 12,249 மில்லியனை செலவிட்டிருந்தது. இருப்பினும், ஐடிஏ வழங்கல் தொடர்பான தனிப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | குறித்த கடன் ஒப்பந்தம் 20.01.2021 அன்று திருத்தப்பட்டது. மாவட்டச் செயலாளர்களுக்கு திறைசேரி வழங்கிய ஒதுக்கீடுகள் அரச நிதி என்பதால், உலக வங்கி உதவியின் கீழ் வழங்கப்படும் பணமாகக் குறிப்பிடப்படவில்லை. திறைசேரியால் செய்யப்பட்ட முழு செலவையும் திருப்பிச் செலுத்துவதற்கு உலக வங்கி ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, திறைசேரியில் வைத்திருந்த பணம் அனைத்தும் திருப்பிச் செலுத்தப்படவில்லை. ஒட்டுமொத்த கொடுப்பனவுகளுக்காக திறைசேரிக்கு திருப்பிச் செலுத்தப்பட்ட உலக வங்கி உதவித் தொகையை விட அதிகளவான பணத்தை அரசாங்கம் செலவிட்டுள்ளது. | அரச மற்றும் உலக வங்கி நிதிகளின் பயன்பாட்டை தனித்தனியாக அடையாளம் காண்பதற்கு பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் கடன் வழங்கும் முகவர் நிறுவனத்தால் ரூபா 19.4 மில்லியன் முன் இறுதிக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தமை நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கோவிட்-19 தொற்றுநோயின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலைக்கு, திறைசேரியால் செய்யப்பட்ட செலவினங்களைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாக மட்டுமே இந்தக் கணக்கீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது, மேலும் இந்தக் கடனுடன் தொடர்புடைய முன் இறுதிக் கட்டணத்தை இந் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய தாய்ச் செயற் திட்டத்தின் கீழ் கணக்கிடுவது பொருத்தமானது.<br><br>இது தொடர்பான விளக்கங்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். | செயற்திட்டச் செலவுகள் அனைத்தும் செலவுக்கூற்றில் தெரிவிக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 களப்பரிசோதனையின்போது மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின்போது பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.**

**(அ) ஹரிஸ்பத்துவ மற்றும் அக்குறணை பிரதேசச் செயலகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஹரிஸ்பத்துவ மற்றும் அக்குறணை பிரதேச செயலகப் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களா என்பது தொடர்பில் சுகாதார சேவை அதிகாரிகளின் போதிய உத்தரவாதமின்றி உணவுப் பைகளை விநியோகிப்பதற்காக ரூபா 21.5 மில்லியன் மற்றும் ரூபா 30.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | அனைத்து விநியோகங்களும் விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | கொவிட் 19 செயற்திட்டத்தைக் கட்டுப்படுததுவதற்காக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான சனாதிபதி செயலணியின் செயலாளரின் 2021 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய பீீஎவ்/03-2021 (ii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நாடு தற்காலிகமாக முடக்கப்பட்டமையால் வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு ரூபா 2,000 கொடுப்பனவாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 7,441 பேருக்கு மொத்தம் ரூபா 14.9 மில்லியன் வழங்கப்பட்டிருப்பினும் பயனாளிகள் கையொப்பமிட்ட ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் அதை திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பயனாளிகளின் தகவல் மற்றும் கையொப்பத்துடன் கூடிய பதிவேடு கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். |
| (இ) | பிரதம அமைச்சரின் செயலாளரின 2020 மார்ச் 31 ஆம் திகதிய பீீஎவ்/01/சுற்றறிக்கை/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கோவிட்-19 தொற்றுநோய்களின் போது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 142 பயனாளிகளுக்கு பணம் பெற்றுக் கொண்டமைக்கான கையொப்பங்கள் பெறப்படாமல் ரூபா 5,000 உதவித்தொகையாக ரூபா 710,000 வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நலன்கள் பெற்றுக் கொண்டமை கையொப்பங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## (ஆ) குருநாகல் பிரதேசச் செயலகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, குருநாகல் மாவட்டத்தில் அரச, அரை அரச மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பங்கள் தவிர்ந்த மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 322,143 (ஆயுதப்படைகள் நீங்கலாக), ஆக இருந்தபோதிலும், அம்மாவட்டத்தின் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையை விஞ்சியதாக 563,652 குடும்பங்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அரசின் புள்ளி விவரங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | குருநாகல் மாவட்டச் செயலாளரின் 2020 ஏப்ரல் 30 ஆம் திகதிய டீஎஸ்கேயு/ஏடீஎம்/எஸ்யுடீ/எஸ்எஸ்/என்எஸ்ஈ டீஎல்/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2020 மே தொடர்பான கொடுப்பனவில், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு வாழ்வாதார இழப்பின் போது ஏதேனும் நன்மைகள் வழங்கப்பட்டிருந்தால், ரூபா 5,000 கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதி இல்லாத போதிலும், 04 பிரதேச செயலகங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட களங்களில் 30 பெரியவர்கள் முறையான விதிமுறைகளுக்கு மாறாக செலுத்தப்பட்டிருந்தனர். | பதில் வழங்கப்படவில்லை. | சரியான தரவுகளின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட வேண்டும் |
| (இ) | சமுர்த்தி கொடுப்பனவு மற்றும் வாழ்வாதார இழப்பு கொடுப்பனவு ஆகிய இரண்டும் நாரம்மல பிரதேச செயலகத்தின் கீழ் ஒரே வீட்டு இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்டு அவை உப குடும்பங்களுக்கு ஒதுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | உதவி பெறும் முறையை தீர்மானித்தல் மற்றும் பணம் செலுத்துதல். |
| (ஈ) | நாரம்மல பிரதேச செயலகத்தின் பல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் மாற்றுத்திறனாளிகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது, சமூக சேவை உத்தியோகத்தர்/சமூக அபிவிருத்தி உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரை மற்றும் உரிய விண்ணப்பப் படிவத்தில் ஊனம் முழுமையாகப் பரிந்துரைக்கப்படாதிருந்ததுடன் பகுதி எவ் இல் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை பூர்த்தி செய்யப்பட.டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பரிந்துரையின்படி விநியோகிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கொட்டாவெஹர பிரதேச செயலகத்தின் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 215 பயனாளிகளுக்கு 2020 ஏப்ரல் 15 ஆம் திகதிய பீரீஈ/01/சுற்றறிக்கை/01 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட படிவம் சமர்ப்பிக்கப்படாமல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலுப்புகெதர களத்தின் வாக்காளர் பதிவேட்டில் பெயர் இடம்பெறாத முதியோர், மாற்றுத்திறனாளிகள், வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கான கொடுப்பனவு 8 சந்தர்ப்பங்களில் குழு தீர்மானங்களினால் வழங்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |

**(இ) பொலன்னறுவ மற்றும் அனுராதபுரம் பிரதேசச் செயலகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பிரதம அமைச்சரின் செயலாளரின் 2020 ஏப்ரல் 03 ஆம் திகதிய பீரீஎவ்/02/2020(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், கொரோனா தொற்றுநோயால் ஏற்பட்ட பேரழிவு சூழ்நிலையின் போது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலன்கள் வழங்கும் திட்டத்தில் கிராமிய குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பிரதேச செயலாளரின் அனுமதியின்றி 03 கிராமிய சேவை களங்கள் தொடர்பாக ரூபா 2.2 மில்லியன் மற்றும் கிராமிய குழுவின் பரிந்துரையின்றி 02 கிராமிய சேவை களங்கள் தொடர்பாக ரூபா 460,000 செலுத்தப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |
| **(iii)** | பிரதம அமைச்சரின் செயலாளரின் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதிய பீரீஎவ்/03/2020(iv) ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அலஹெர பிரதேச செயலாளர் பிரிவில் உழவர் ஓய்வூதியம் பெறுகின்ற 05 பயனாளிகளுக்கு ரூபா 25,000 வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |
| (iv) | தியபெந்தும கிராம உத்தியோகத்தர் களத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பரிசோதித்த போது, கிராம குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக ரூபா ஹ15,000 பணம் செலுத்தப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | பிரதம அமைச்சரின் செயலாளரின் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதிய பீரீஎவ்/03/2020(iv) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் புலம்பெயர்ந்த உறுப்பினர்களுக்கு அவர்கள் பணம் அனுப்பவில்லை மற்றும் முந்தைய சேமிப்பு எதுவும் இல்லை என்பதைச் சரிபார்த்த பிறகு அவர்களுக்கு நன்மைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் தியபெதும களத்தின் 10 பயனாளிகளுக்கு ரூபா 50,000 செலுத்தப்படவில்லை. மீதி உறுதிப்படுத்தல் இன்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பரிந்துரையின்படி விநியோகிக்கப்பட வேண்டும். |
| (vi) | அலஹெர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 12 பயனாளிகளுக்கு ரூபா 60,000 மற்றும் ஹிங்குராக்கொட பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 16 பயனாளிகளுக்கு ரூபா 80,000 என்பன அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்படாமல் செலுத்தப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும் |